திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர். திரு. இரா.செந்தாராஜன்.எம்.எஸ்.ஸி.,பி.எட்., எம்.பில்.,

ந.க.எண்.011027/அ1/2022 நாள். 09.10.2024

பொருள் பள்ளிக் கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை நியமனம் - திருவாரூர் மாவட்டம் - மூவாநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி - பட்டதாரி ஆசிரியர் - திரு.பா.சுந்தரேசன் என்பவர் 11.05.2015 இல் இறப்பு வாரிசு தாரரான மகன் திரு.சு.சிவராமகிருஷ்ணன் என்பாருக்கு கருணை அடிப்படையில் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை

1. அரசாணை நிலை எண் 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) நாள்.23.01.2020
2. சம்மந்தப்பட்டவரின் கருத்துரு
3. அரசாணைநிலை எண் 151 பள்ளிக் கல்வி எம் இ (1) துறை நாள் 09.09.2022
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) ந.க.எண்.39671/ஜே/இ4/2021 நாள்.17.09.2022, 24.09.2022, 06.10.2022 மற்றும் 11.10.2022
5. திருவாரூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.009811/அ2/2022 நாள்.12.10.2022
6. திருவாரூர் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.011327/அ1/2022 நாள். 17.06.2023
7. அரசு கடித efile எண்.4410/தொ.க (1)/2024-1 நாள்.17.05.2024
8. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் சென்னை-06. ந.க.எண்.026062/ஜே(என்)இ2)2023 நாள். 22.05.2024
9. சென்னை-06. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் கடித ந.க.எண்.00904/ஜே/இ2/2024 நாள்.12.07.2024

திருவாரூர் மாவட்டம் மூவாநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்த திரு.பா.சுந்தரேசன் என்பார் பணியில் இருக்கும் 11.05.2015 அன்று காலமானார். அவரது மகன் திரு.சு.சிவராமகிருஷ்ணன் என்பர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 14.09.2017 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு. சு.சிவராமகிருஷ்ணன் என்பார் 10 ஆம் வகுப்பு பொது தேர்வினை மார்ச் 2011 இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 23.07.1996 . பார்வை (1)இல் கண்டுள்ள அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் வறிய நிலையும் அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதை கருத்தில் கொண்டு திரு.சு.சிவராமகிருஷ்ணன் என்பவருக்கு திருவாரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.009811/அ2/2022 நாள்.12.10.2022 இல் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 14.10.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாக மேலே தெரிவிக்கப்பட்ட நிலையில் திரு.சு.சிவராமகிருஷ்ணன் என்பவரின் பணியினை தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

Scanned with OKEN Scanner

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் கடித ந.க.எண். 00904/ஜே/இ2/2024 நாள்.12.07.2024 இல் அனைத்து அசல் சான்றிதழ் மற்றும் கருத்துருவினை இணைத்து அரசுக் கடித efile எண். 4419/தொ.க.(1)/2024-1 நாள் 17.05.2024 இல் தெரிவிக்கப்பட்டவாறு நியமன அலுவலரான முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் விதி தளர்வாணைகள் தேவைப்படாத நிலையில் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)செயல்முறைகள் மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.சு.சிவராமகிருஷ்ணன் இளநிலை உதவியாளர் வட்டாரக் கல்வி அலுவலகம். கொரடாச்சேரி. என்பாரது கருத்துரு ஆய்வு செய்து அதனை ஏற்ற தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.சு.சிவராமகிருஷ்ணன் என்பவரின் பணியினை பணிநியமனத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் கீழ்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | கல்வித் தகுதி | பிறந்த தேதி மற்றும் பணி நியமன நாளில் வயது | இளநிலை உதவியாளர் பதவியில் | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1 | திரு.சு.சிவராமகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், கொரடாச்சேரி. | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 23.07.1996 26 வயது | 14.10.2022 முற்பகல் | 14.10.2022 முற்பகல் |

அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வுகள் விதிகளின் படி பெற தகுதியுடையவராகிறார். இத்துடன் பெறப்பட்ட தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றிதழ்கள் பரிசீலனைக்குப் பின் திரும்ப அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலையும், பணிவரன்முறை சார்ந்தப் பதிவுகளை தொடர்புடையவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு- பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள்

9.10.24

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)

திருவாரூர்

09/10/24

பெறுநர்-

வட்டாரக் கல்வி அலுவலர், கொரடாச்சேரி

(தொடர்புடையவர் கூடுதல் படியுடன்)

நகல்-

1. பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி), சென்னை 06-பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி/இடைநிலை), திருவாரூர்- தகவலுக்காக அனுப்பப்படுகிறது.